முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 615**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**05.06.2021**, சனிக்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
ஞானிகளின் துணைகொண்ட தேசிகனே
தானதர்மம் கொண்டு இந்தஉலகத்தை
தக்க ஞானலோகமாக்க அவதாரமெடுத்த
2. அவதாரமெடுத்த நல்அரங்கனே குருராஜனே
ஆறுமுகன்யானும் உந்தனுக்கு ஞானஅறிவுரைஆசி
வரமென பிலவ விடைதிங்களில் உரைப்பேன்
வல்லமைபட அரங்கன்தர்மமே கலியின் துன்பங்களைபோக்கும்
3. போக்குவதோடு உலகமக்களை மீட்டு
பேரிடரிலிருந்து பாதுபாப்புதந்து அருள்புரியும்
தேக்கமின்றி ஞானவழி தொடர்ந்துவரும் மக்கள்
தேசிகன்வழி திருவருள்பெற்று நிலைக்கநேரும்
4. நேர்மைபட அரங்கன் நாமஜெபங்கள் போற்றி
நிலஉலகில் பேதநிலை கொள்ளா
ஆதரவாய் சமத்துவகுணம் கொண்டு
அறிவிப்பேன் சன்மார்க்கநெறிபடி நடக்க
5. நடக்கவே உலகோர்க்கு பாதுகாப்பு
நச்சுக்கிருமிவழி துன்பங்களும் அகன்றோடி
இடரின்றி ஆயுள்பலம் காணக்கூடும்
இவ்வுலகில் நிலைபெற்று சிறக்கநேரும்
6. நேர்மைகொண்டு அரங்கன் காட்டுகின்ற
நீதிவழிகளை பின்பற்றி வர
தர்மத்தை பெருக்கிக்கொண்டு உலகமெங்கும் தயவைகூட்ட
தரணியே மாற்றம் பெறும்
7. மாற்றம்தர வந்தநல் ஞானி
மகத்துவம்பட அருளும் மாதவசி
ஆற்றல் அறிந்த மக்களுக்கே
அகிலத்தில் அழியாமைகிட்டி பெரும்பேறுகாணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.